


*ஏ.பி.எம். இத்ரீஸ் 80களின் நடுப்பகுதிகளிருந்து தமிழ் எழுத்தியக்கத்துடன் ஆர்ப்பாட்டங்கள் இல்லாமல் இயங்கிவருபவர். தபால் என்ற செய்தித்தாளுடன் தொடங்கிய இவரது எழுத்துக்கள், தளிர், மீள்பார்வை ஆகிய பத்திரிகை உருவாக்கங்களில் வெற்றி கண்டது. எமது பா5ர்வை என்ற சஞ்சிகைக் குழுவிலும் இயங்கியவர். பாடசாலைக் காலத்திலிருந்தே வானொலி, அரங்க செயற்பாடுகள் பலவற்றுக்குப் பிரதியாளர். கருத்துச் சுதந்திரம், சிறுவர் உளவியல், சீறாவின் இயங்கியல், அபாயகரமான வார்த்தை, அதிகாரம் பற்றிய இரண்டு கண்ணோட்டங்கள், சிந்தனை எவ்வாறு பிறக்கின்றன, பேச்சும் தலைமைத்துவமும் என்பன நூலுருவாக்கம் பெற்ற இவரின் ஆய்வுகளாகும். பல்வேறு மொழிமாற்றங்களை அறபியிலிருந்து தமிழுக்குக் கொண்டுவந்தவர். புரிதல் என்ற குறுந்திரைப்படத்தின் தயாரிப்பாளர் என்பது இவரின் சினிமா முகம். யாத்ரா பதிப்பக ஆரம்பகர்த்தா. இன்று உயிர்ப்பைத்தேடும் வேர்கள் பதிப்பகத்தின் முதன்மைச் செயற்பாட்டாளர். இதனூடாய் பல நூல்களை அழியாது காத்துவருபவர்.*

*90களிலிருந்து இஸ்லாமிய முகாம் சார்ந்து சமூகமாற்றப் பணிகளில் மிகவும் நிதானமாக செயற்பட்டவர், செயற்பட்டு வருகிறார். இவர் ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தில் தன் உயர் கல்வி மேற்கொண்டு தற்போது அங்கயே சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். இன்று முஸ்லிம் தேசத்தின் பல்வேறு துறைகளில் இயங்கிக்கெண்டிருக்கும் பலரின் உருவாக்கம் இவரின் அமைதியான செயற்பாட்டுக்குப்பின்னே மௌனமாக மறைந்து கிடக்கும் பெரியதொரு வெற்றியாகும்.*

*மாணவர்களுடன் சகஜமாகப் பழகும் ஏ.பி.எம் இத்ரீஸ் ஆசிரிய அதிகார மிடுக்குகளைத் தகர்த்து பல்வேறு தளங்களில் மாற்றங்களை ஏற்படுத்தியவர். இஸ்லாம்பற்றிய பல்வேறு பார்வைகள் காணப்படும் இன்றைய சூழலில் மிக அவதானத்துடன் இஸ்லாமிய ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். மறுமொழி இதழ் இவரது மாணவர்களின் முதல் எழுத்தியக்க பதிப்பாகும்.*

*சமூகமாற்றப்பணி, எழுத்து, சிந்தனை, கோட்பாட்டாக்கம், பதிப்பு, உரைகள், ஆலோசனைகள், விரிவுரைகள், சினிமா, என்று பல்வேறு முகங்களில் இயங்கிக்*

*கொண்டிருக்கும் இவர், சோனகத்தேசம், கீழைத்தேய மதங்களுக்கிடையிலான ஒத்திசைவு என்பவற்றில் ஆய்வுகள் பலவற்றினை மேற்கொண்டு வருகிறார்.*

*அதிகாரம் பற்றிய இரண்டு கண்ணோட்டங்கள் என்ற இவரது நூல் பல்வேறு அதிர்வுகளை தமிழ் எழுத்தியல் சூழலில் ஏற்படுத்தியதாகும்.*

*அவருடனான உரையாடலுக்கு மிகுந்த சிரமத்திற்கு மத்தியிலும் சம்மதம் தெரிவித்தமைக்கு நன்றிகள். **(நேர்காணல்: செயற்பாட்டாளர்கள்)***

# 1

## முதலில் சம்பிரதாயமான கோள்விதான். உங்கள் ஆரம்பகால எழுத்து, சிந்தனைச்செயற்பாடுகள் பற்றி, அதன் வளர்ச்சி பற்றி கூறுங்கள்.

பாடசாலைக்காலத்தில் ஆண்டு மூன்றில் வகுப்பறையில் எழுந்து வாசித்த அனுபவம் இருக்கிறது. அதிலிருந்து எல்லோரையும் போல அம்புலிமாமா, மாஸ்டர் சிவலிங்கத்தின் சிந்தாமணி கதைகளிலிருந்து வாசிக்கத் தொடங்கியிருக்கிறேன். ஆராமாண்டிலிருந்து எமது பகுதியிலுள்ள பல நூலகங்களில் அங்கத்தவானகச் சேர்ந்து அதிகமாக வாசித்தேன். பின்னர் எழுத வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. முதலில் கவிதைகள், சிறுகதைகள் போன்றவற்றை எழுதிப்பார்த்தேன். அதைவிட சிறப்பாக எழுதுபவர்கள் எமது பிரதேசத்திலே இருந்தார்கள். நாடகத்துறைதான் அங்கு வெற்றிடமாக இருந்தது. என்னுடைய மைத்துனர் ஒருவர் கூட நாடகத்துறையில் ஈடுபாடுடையவராக இருந்தார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அப்போது என்னுடைய ஒன்பது நாடகங்கள் ஒலிபரப்பாகின. அதிலே சில நாடகங்களுக்கு கடுமையான எதிர்ப்பும் கிளம்பியது. பல்கலைக்கழகக் கல்விக்காக நான் வெளியூர் சென்ற காலப்பிரிவில், அறபு, இஸ்லாமிய சிந்தனையாளர்களுடைய படைப்புக்களை பெருவாரியாகப் படிக்கும் நிலை தோன்றியது. இந்தியாவுக்கு இணையான அல்லது அதனையும் தாண்டிய காலனியத்தை நேரடியாக எதிர்த்துப் போராடி சிறைக்குச் சென்ற பல முஸ்லிம் போராளிகளின், எழுத்தாளர்களின் படைப்புகளை கூடுதலாகப் படித்தேன். எனது பிரச்சாரத்துக்கான களப்பணியும் அக்காலப்பகுதியில் தான் ஆரம்பமானது என்பதால் அதிலிருந்து நான் பெற்ற அனுபவங்கள் முக்கியமானது என்று கருதுகின்றேன். அமைப்பாக்கம் என்பது பல மூளைகள் சங்கமிக்கின்ற களமாக அமைந்திருந்தது. அறிவை விசாலிக்கவும், சமூகத்திலிருக்கின்ற பிரச்சினைகளோடு எங்களுடைய கோட்பாட்டை உரசிப்பார்க்கவும் இக்களம் பெரிதும் உதவிசெய்தது. 96களிலிருந்து பின்னவீனத்துவக் கோட்பாடும், படைப்புக்களின் அறிமுகமும் கிடைக்க ஆரம்பித்ததோடு என்வாசிப்பு வேறு திசைக்கு நகர்ந்தது. 80களை விட மாற்றமாக இருந்தநிலை, 90களில் நிகழ்ந்த அரசியல் மாற்றம், புலம்பெயர் இலக்கியங்கள் அவற்றின் பெருக்கம், கருத்தியல்கள், அரசியல், கலை இலக்கியப் போராட்டங்கள் இவற்றை ஒட்டி அறபுலக இஸ்லாமிய சிந்தனைச் செல்நெறிகளோடு மீண்டும் பரிச்சமாகும் வாய்ப்புக் கிடைத்தது.

90களின் ஆரம்பத்தில் எமது பார்வை என்ற சஞ்சிகை ஷகீபை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த போது அதில் இணைந்து பணியாற்றினேன். பின்னர் தளிர். 96களில்

மீள்பார்வையை குழுவாக இருந்து செயற்படத்தொடங்கிய நாங்கள் 1997 காலப்பகுதியில் போர்க்காலப்பாடல் என்கின்ற கவிதைத் தொகுதியை யாத்திரா ஊடாக வெளியிட்டோம். இரண்டாவது நூலாக அஷ்ரப் ஷிஹாப்தீனின் காணப்போனவர்கள் வெளிவந்தது. யாத்ராவை கவிதைச் சஞ்சிகையாக மாற்றிக் கொண்டபின்னர் வேறாக உயிர்ப்பைத்தேடும் வேர்கள் என்ற பெயரில் பதிப்புக் கணவுகளோடு 99ஆம் ஆண்டு வை.அஹமதின் முக்காடு, தரிசனங்கள் என்ற சிறுகதைகள், குறுநாவல்கள் அடங்கிய தொகுப்புக்களை வெளியிட்டு முக்காட்டிலுள்ள இரண்டு சிறுகதைகளை நாடகமாக்கினோம். அது பலத்த வரவேற்பைப் பெற்றது. அந்த விழாவில் சிறுவர் கார்ட்டூன் திரைப்பட்டத்தையும் நேரடியாக மொழிமாற்றம் செய்து வெயிட்டதுடன் காட்சி உலகத்திற்குள்ளும் என்னால் நுழைய முடியுமாக இருந்தது.

இதுவரை உயிர்ப்பைத்தேடும் பதிப்பகம் ஊடாக 10 நூல்களை வெளியிட்டிருக்கிறோம். வை.அஹ்மத் , றவூப் ஸெய்ன் , என்னுடையவை போன்றன இதில் அடங்குகின்றன . இதிலே சீறாவின் இயங்கியல் என்ற நூல் மொழி சிக்கல் என்ற விமர்சனம் முன்வைக்கப்பட்ட போதும் இது பற்றி ஏ.இக்பால் முக்கால் மணிநேரம் சிலாகித்துப் பேசினார். ஒரு அரசியல் கூட்டத்திலும் காட்டி போசப்போவதாகக் கூறினார். இது நபியின் வரலாற்றைப் புராணமாகப் பார்த்த ஒரு காலம் முடிந்து அதனை ஒரு சமூக இயங்கியலாக, சமூகமாற்றத்திற்கான முறைவழிகளைத் தேடும் ஒன்றாக அனுகவேண்டும் என்பதுதான் என்னுடைய நிலைப்பாடாக இருந்தது.உண்மையில் இஸ்லாமிய சீர்திருத்தப்பணியை மேற்கொள்கின்றவர்களை அதி மனிதர்களாக, சுப்பர்மேன்களாக கட்டமைத்துக் கொண்டு இறைத்தூதரின் சீறாவை புறமொதுக்குகின்ற நிலை இங்கு நிலவிவந்தது. இந்நிலையில் குறிப்பிட்ட சீர்திருத்த வாதிகள், அவர்களுடைய காலப்பிரிவு, இடம், வெளி என்பவற்றின் சவால்களுக்கு அவர்களுக்கு வாழ்க்கை வரலாற்றில் தீர்வு இல்லை, தொடர்ந்தும் அதிகார பீடங்களாகவும், சந்நிதானங்களாவும் அவை மாறிப்போய்விடுகின்றன. இவற்றைக் கட்டவழிப்புச் செய்து பார்க்கவும், எல்லா சுயசரிதைகளைவிடவும் பல பரிமாணங்களை உற்கொண்ட நபிகளாரின் சுயசரிதை காணப்படுவதாலும் அதை எடுத்துக்காட்ட வேண்டும் என்ற உணர்வும் இருந்தது. இதற்காக நான் வாசித்த நூற்கள் அதேமாதிரியான மொழிநடையில் அமைந்திருந்ததால் எளிமைப்படுத்துவது இயலாததாக இருந்தது. அதனை 2005 இற்கான எனது வாசிப்பின் மொழிநடையின் வளர்ச்சியாகவும் கொள்ள முடியும். சிறுவர் உளவியல், அபாயகரமான வார்த்தை போன்ற நூற்கள் ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டு பிரசுரமாகாமல் இருந்தவை. விரிவுரை மண்டபங்களுக்குள் சுறுங்கிப் போகின்ற நிலையில் இருந்த அவற்றை இன்றைய தலைமுறை பல வேண்டிக் கொண்டதால் பிரசுரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

## 2

**இலங்கையில் பிரபலமான ஒரு இஸ்லாமிய கல்விநிலையத்தில் கடமையாற்றும் நீங்கள், அறபு மத்ரஸாக்களின் பாடத்திட்டங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும்**

**என்று தொடர்ந்து எழுதியும் பேசியும் வருகின்றீர்கள். இது குறித்து விளக்கமுடியுமா?**

நான் நினைக்கிறேன் 1942 ஆம் ஆண்டு கொழும்பு செட்டியார் தெருவில் மௌலானா மௌலவி உமரலி ஹஸரத் அவர்கள் மத்ரஸாக்களின் பாடத்திட்டங்கள் மாற்றப்பட வேண்டும் என்கின்ற கருத்தை ஒரு மீழாத்விழாவில் பகிரங்கமாகப் பேசியிருக்கிறார்கள். இன்றைய மத்ரஸாக்கள் அப்பாஸியக் கோர்டுகளுக்கான வழக்கறிஞர்களையும் உமையா காலப்பகுதிக்கான நீதிமன்றங்களையுமே உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. அது இருபதாம் நூற்றாண்டுக்குத் தேவையானவர்களை உருவாக்கவில்லை என அவர் அந்த மேடையிலே குறிப்பிடுகின்றார். அதாவது மனிதன் குரங்கிலிருந்து தோன்றினானா இல்லையா? ஆலிம்சாவைக் கேள்! அலோபதி வைத்தியமுறை சிறந்ததா? மூலிகை வைத்தியமுறை சிறந்ததா? ஆலிம்சாவைக் கேள்! கோழி முந்தியதா? முட்டை முந்தியதா? ஆலிம்சாவைக் கேள்! 30 ரூபாய் சம்பளம் எடுத்து பொண்டாட்டியிடம் அடியும் உதையும் ஏச்சும் வாங்கும், மரைக்காமாரிடம் குட்டுப்படும் அப்பாவி ஆலிம்சாவிடம் இத்தனை கேள்விகளையும் கேட்டால் அவன் எப்படி தாங்கிக் கொள்வான் என்று மௌலானா மௌலவி ஹஸரத் உமரலி அவர்கள் அன்றைய ஆலிம்சாக்களின் கல்வித்தரம் உயர்த்தப்பட வேண்டும், கல்வித்தரம் மாற்றப்பட வேண்டும், பாடத்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்றெல்லாம் கேட்டிருந்தார்.

பின்னரும் இலங்கை உலமாசபை, ஜம்மியத்துல் உலமா, முஸ்லிம்சமைய பண்பாட்டு அமைச்சும் மத்ரஸா பாட சீர்திருத்தத்திற்கான பல பட்டறைகளை, கூட்டங்களை நடத்தி அது பெருமளவு தோல்விகளையே சந்தித்தது. அண்மையில் பல மாற்றங்கள் தெரிகின்றது. குழுவாக இல்லாவிட்டாலும் தனித்தனியாக ஏற்பட்டு வருகிறது. ஆனாலும் பாரம்பரிய 100 வருட பின்னணயிலிருந்து பார்க்கின்ற போது சமகால சவால்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் பாட சீர்திருத்தங்கள் இடம்பெறவில்லை என்றுதான் கூறவேண்டும். ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு தேசிய பாடத்திட்டம் அமைக்கப்படுவது பலவகையிலும் எங்களது பொருளாதார ஆளணி வளம் சிதைக்கப்படுவதிலிருந்து மேலும் நாம் உந்து சக்தியோடு உழைப்பதற்கும் வீரியத்தோடும் கடைமாற்றுவதற்கும் வழிவகுக்கும் என்று நினைக்கிறேன்.

இலங்கையில் 10,000 பள்ளிவாயல்கள் இருக்கின்றதென்றால் அதற்குத் தேவையான ஹாபில்களைத்தான் நாம் உருவாக்க வேண்டும். அதிகமான ஹிப்ளு மத்ரஸாக்களை உருவாக்குவதனூடாக அவர்களுக்குரிய வேலைவாய்ப்பை நாம் எப்படிப் பெற்றுத்தரமுடியும். பல மத்ரஸாக்கள் இருப்பதால் ஆளணிகள் விநியோகிக்கப்பட்டு ஆளணி விரையம் ஏற்பட்டு எங்களது நாட்டில் மூளை உழைப்பாளிகள், புத்திஜீவிகள் மழுங்கடிக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டுவிடும். சமூக விஞ்ஞானத் துறைசார்ந்து ஏனைய துறைகளுக்கும் வழிகாட்டப்படுமாக இருந்தால் அவர்களுடைய புலமைத்துவப்பரப்பு விஸ்தரிக்கப்படும். அதில் வீரியமான வளர்ச்சியை எதிர்காலத்தில் நாம் காணமுடியும்.

மனிதனுக்கு உடல் சார்ந்த வளர்ச்சி என்பது பௌதீக வளர்ச்சிதான். இதில் முழுமையடையலாம். ஆனால் அறிவு சார்ந்த வளர்ச்சி என்பது முழுமையானதல்ல. இது எப்படியான நிலையில் வளர்கிறது என்றால் அறிவு பொதுப்பொருளாக இருந்தால்தான்.

தேடலுக்குறிய பொருளாக இருந்தால் தான் வளரும். அறிவு காணமால் போன சொத்து. அதைக் கண்டுபிடிப்பதற்கு தேடவேண்டும். இதற்கு ஆசிரியரின் நேட்ஸ் கொப்பி சிலபஸாகவும் மத்ரஸா பாடத்திட்டமாகவும் அது இருந்தால் அதைப்பாடமாக்கி பின் மூன்று மணித்தியாளத்தில் வாந்தி எடுத்தால் அவன் பாஸ். வாந்தி எடுப்பதற்கு ஐந்து நிமிடத்திற்கு முந்தி மறந்தால் பெய்ல். இதில் முந்தி மறத்தல், பிந்தி மறத்தல் என்ற வித்தியாசத்தைத் தவிர வெறொன்றுமில்லை.

இங்கு கண்டுபிடித்தவர் யார்? என்று தான் நாம் கேள்விகேட்கிறோம். அதை நீ ஏற்றுக் கொள்கிறாயா என்று நாம் கேள்வி கேட்பதில்லை. வகுப்பறையில் ஒரு வாய் பேசிக்கொண்டிருக்க பல காதுகள் கேட்டுக்கொண்டே இருக்கிறது. உண்மையில் அது கேட்கிறதா? பிராண்டுதா? கிள்ளுதா? நோண்டுதா என்று தெரியவில்லை.

மற்றொரு பிரச்சினையும் காணப்படுகின்றது. பாடசீர்திருத்தம் அல்லது பாட்டத்திட்ட மாற்றம் ஏற்பட்டாலும் அறபுலகம் சார்ந்த, அறபுலக பல்கலைக்கழக கல்வி சார்ந்த பாடத்திட்ட மாற்றமாகத்தான் இலங்கையில் மேற்கொள்ளப்படும். இது அறபு இஸ்லாமிய பின்புலத்திற்கும் எமது நாட்டில் சிறுபான்மை பல்லினத்தன்மை உள்ள பண்பாட்டிற்குமிடையில் ஒத்திசைவில்லாத தன்மையை ஏற்படுத்தும். அறபு கலாநிலையங்களில் பட்டம் பெற்று வெளியேறுகின்றவர்கள் சமூகப்பணிகளுக்கா களத்தில் இறங்குகின்ற போது இங்கிருக்கின்ற சவால்களை எதிர்கொள்ள முடியாதவர்களாகத்தான் இருக்கின்றனர். இதற்குக்காரணம் அவர்களது பாடத்திட்டம் அறபுலகத்தை நோக்கி வழிகாட்டுவதாகும்.

உதாரணமாக அஃலுல் கிதாப் என்பதற்கு அறபு நூல்களில் யூத-கிருஸ்தவர்கள் அதாவது வேதம் வழங்கப்பட்டவர்கள் என்றே விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே அல்குர்ஆனில் ஒவ்வொரு சமூகத்திற்கும் நாம் தூதரை அனுப்பியிருக்கிறோம். ஒவ்வொரு சமூகத்திற்கும் நேர்வழிகாட்டியை அனுப்பியிருக்கிறோம் என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. எனவே அறபுத் தீபகற்பத்திற்கு வெளியிலும் தீர்க்க தரிசிகள் வந்து போயிருக்கிறார்கள். அவர்களுடைய போதனைகளும், கோட்பாடுகளும் திரிபு மாற்றங்களோடு இடைச்செறுகள்களோடு, பிழையான வியாக்கியனங்களோடு இன்றும் காணப்படுகின்றன. குறிப்பாக ஒரு ஆன்மீக அம்சத்தையோ, பன்பாட்டு அம்சத்தையோ இஸ்லாம் கடைப்பிடிக்கின்ற விடையத்தையோ எடுத்து விளக்குகின்ற போது அவற்றை இந்தப் பண்பாட்டு பல்லின தன்மைச் சூழலில் ஒப்பிட்டு விளக்கும் போதுதான் வினைத்திறனுள்ளதாகவும் சகவாழ்வுக்கு அடிகோல்வதாகவும் அமையும். தொழுகை பற்றிய தொரு அறபு நூலில் கிறிஸ்தவ, யூத மதத்தின் தொழுகை பற்றிய ஒப்பீடுகள் தான் இருக்கும். ஆனால் இந்தப் பிராந்தியத்தில் இஸ்லாத்தின் வணக்க வழிபாடுகளை இந்து மதத்தின், பௌத்த மதத்தின் வழிபாடுகளோடு ஒப்பிடுகின்றன நிலையில்தான் பாடத்திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும். உதாரணமாக எங்களுக்கு நோன்பு இருப்பதைப் போன்று அவர்களுக்கு உபவாசம் இருக்கின்றது. இவை இரண்டுக்குமிடையில் எத்தகைய தனிச்சிறப்பம்சங்கள், முரண், உறவுகள் இருக்கின்றதென்பதை விஞ்ஞான ரீதியாக குத்பா பிரசங்கம் செய்யவோ அயலில் வாழ்கின்ற அவர்களுக்கு கேட்கக்கூடிய வகையில் பேசக்கூடியதாகவோ நிலைமை இல்லாமலிருக்கிறது. இது தொட்டு அறபு வழியிலான பாடத்திட்ட அமைப்பில் குர்ஆனையும் நபியின் சுன்னாவையும் எங்களுடைய சூழலுக்கேற்ற

வகையில் வாசிப்புச்செய்யக்கூடிய ஒரு புதிய வாசிப்பு முறையைக்கொண்ட பாடத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

# 3

## நாகரிகங்களுக்கிடையிலான மோதல் என்கின்ற கருத்தியல் இன்று நாகரிகளுக்கான உரையாடலாக மாற்றம் பெற்றிருக்கின்றது. இதனை முஸ்லிம் சமூகம் எப்படி எதிர்கொள்வதாக உணர்கிறீர்கள்?

எட்வேட் ஸைத் இதனை ட்வலிங் தியரி என்கிறார். ஒரு சிந்தனை பல்வேறு பாண்பாடுகள், புவியியல் எல்லைகளுக்குள்ளால் ஊடுறுவிச் செல்கின்ற போது அது அடைகின்ற பரிணாமம், மாற்றம், உருமாற்றம் என்பதெல்லாம் இஸ்லாத்திற்கும் இருக்கின்றது. இதற்கு இஸ்லாம் விதிவிலக்கானதல்ல. ஆபிரிக்கப் பண்பாட்டையும் ரோம பாரசீகப் பண்பாட்டையும் இந்தியப் பண்பாட்டையும் அரேபியப் பண்பாட்டையும் உற்கொண்டதாகத்தான் இஸ்லாமிய ஒட்டுமொத்தப் பண்பாடு வளர்ந்திருக்கிறது. அறபிகள் இஸ்லாமியத் தூது கிடைத்தன் பின்னர் ஆபிரிக்க, பாரசீக, இந்திய இசைகளை அறபு இசையாக மாற்றியிருக்கிறார்கள். இதேபோன்றுதான் சிந்தனை, வழக்காறுகள், மரபுகள் விடயத்திலும்.

நம் நாட்டைப் பொறுத்தவரையில் எங்களுக்குரிய வரலாறு நீண்டது. அது எட்டாம் நூற்றாண்டுக்கும் முந்தியது. இதனை எட்டாம் நூற்றாண்டோடு சேர்த்துப் பார்ப்பவர்கள் ஐந்து நூற்றாண்டுகளாக நாம் அடைந்த நலிவும், கரையோரப் பிரதேசங்களையும் போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் கைப்பற்றி கடைசியாக ஆங்கிலேயரும் காலனித்துவத்திற்கும் உற்படுத்திய காலப்பிரிவில் கலாசார பண்பாட்டு அரசியல் கல்வி, சமயத்துறைகளில் இந்நூற்றாண்டுகளில் நமக்குள் ஏற்பட்ட தேக்க நிலையில் இருந்து நாம் முற்றுமுழுதான விடுதலையை அடையவில்லை என்று குறிக்கிறார்கள்.

அந்த வகையில் பார்க்கின்ற போது அறாபி பாஷா எகிப்திலிருந்து நாடு கடத்தப்பட்டு வந்த பிறகுதான் கல்வி மறுமலர்ச்சி, பண்பாட்டுத் தொடர்ச்சி எங்களுக்குள் கிளைவிடுவதாகக் கூறுகிறார்கள். அதைத் தொடர்ந்து சர்வதேச இஸ்லாமிய உலகத்தின் புணர்நிர்மானக்குழுக்களும் முகாம்களும் இலங்கையை வந்தடைகின்றன. கிலாபத் இழக்கப்பட்டதன் பிறகு தென்னிந்தியாவுடனான உறவு முஸ்லிம்களுக்குப் பலமாக இருந்தது. அந்த உறவின் அடியாகவும் இலங்கைக்குள் இஸ்லாமிய எழுச்சிக்கான பாய்ச்சல் ஏற்படுகிறது. பாரம்பரியமாக இலங்கை அறபுக் கலா நிலையங்களில் கற்று வெளியேறியவர்களும் அதற்குள் தோன்றிய முற்போக்குச் சிந்தனையாளர்களும் இலங்கை முஸ்லிம்களிடையே கனிசமான மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்று வேலை செய்கின்ற இஸ்லாமிய அமைப்புக்களும் வெளியிலிருந்து வந்தவை என்பதால் அவைகளின் ஆரம்பகால செல்நெறிகள், பிரசார சமூக மாற்ற வழிமுறைகள், இலங்கைப் பண்பாட்டிலிருந்து முகிழ்ந்தவைகளாக இருக்கவில்லை. சிற்சில மாற்றங்களும் உடைப்புக்களும் எமது பண்பாட்டுக்குள் ஏற்பட்டிருக்கின்றன. மாற்றங்களைச் செய்த அல்லது உழைத்த புலமையாளர்களின் வழிமுறைகளைக் கற்று அறபு வழியிலான

இஸ்லாமிய சிந்தனையையும் இணைத்து ஒரு புதிய பாச்சளைக் கொண்டு செல்லவேண்டும் என்ற கருத்தும் ஏற்பட்டு வருகின்றது.

எந்தப் பண்பாட்டு கலாசார சமூகமாற்றத்திலும் மூன்று வகையான நிலைகள் இருப்பதாக தாஹா ஜாபிர் அலவானி என்ற சர்வதேச சிந்தனைக்கான இஸ்லாமிய நிறுவனத்தில் பனியாற்றுகின்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். ஒரு சிந்தனைப் படையெடுப்பின் போது அதனைக் கடுமையாக எதிர்த்து போராடுகின்ற ஒரு குழு அந்தப் பண்பாட்டுக்குள் இருக்கும். முற்றுமுழுக்க அதன் கருத்துக்களை ஏற்று அதற்கு அடிமைப்படுகின்ற ஒரு குழுவும் இருக்கும். வெளியிலிருந்து வருகின்றன ஒரு சிந்தனையின் நல்ல அம்சங்களை எடுத்துக்கொண்டு ஊறுவிளைவிக்கின்ற பகுதிகளை நீக்கிவிட்டு தங்களுடைய பண்பாட்டோடு இணைத்து மாற்றீடு செய்கின்ற கலாசாரப் பதிலிகளை, நாகரிகப் பதிலிகளை உருவாக்குகின்ற ஒரு குழுவும் இருக்கும். இதில் மூன்றாவது குழுவே ஆரோக்கியமானது. முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்பவர்கள் தொடர்ந்து காலனித்துவம் நிலைப்பதற்கும் உள்நாடு சுரண்டப்படுவதற்கும் வழிவகுப்பவர்கள் எதிர்ப்பவர்களும் கடைசியில் கலாசாரத் தற்கொலை, பண்பாட்டுத் தற்கொலை நிலைக்குத்தான் செல்வார்கள். இது ஒரு வெறுமை நிலையை ஏற்படுத்தும். அந்த வகையில் அறபு இஸ்லாமிய உலகில் ஏற்பட்ட இஸ்லாமிய பண்பாட்டு வளர்சி மாற்றங்களை அப்படியே இங்கு கொண்டுவந்து திணிப்பது பேரீச்சை மரத்தைக் கொண்டு வந்து நாட்டுவது அல்லது மொஸ்கோவில் மழை பெய்கின்ற போது இடதுசாரிகள் கொழும்பிலே குடைபிடிப்பது நிலை மாதிரிதான். இத்தகைய நிலை இஸ்லாமிய அணிகளுக்குள்ளும் இருக்கிறது. இதனை எதிர்காலத்தில் தான் நாம் மாற்றியமைக்க வேண்டும். குறிப்பாக நாம் பேசுகின்ற சூறா கவர்மன்ட் பை டிஸ்கஸன்ட் என்பது அவர்களுக்குத் தெரியாது. அதேபோன்று டெமோகிரஸி என்பதுதான் அவர்களுக்குத் தெரிந்த சொல்லாடல். இவற்றுக்கு மத்தியில் டெமோகிரஸியில் இருக்கின்ற கிரேஸியை இணைத்து சூறாகிரேஸி என்று சொல்லலாமா என ராஸித் அல் கன்னூஸி என்ற டியூனிஸ இஸ்லாமிய இயக்கத் தலைவர் குறிப்பிடுகிறார். அதே போன்றுதான் ஸம்ஸம் கோலா என்பதும். கொகா கோலாவின் மென்பான உலகில் போட்டியிடுவதாக இருந்தால் அதிலிருக்கும் ஒரு சொல்லை இணைத்துத்தான் அதை அறிமுகப்படுத்த வேண்டிய இடைக்கால நிலைமாறு கட்டத்தில் நாம் இருக்கின்றோம். இந்தக் காலப்பிரிவில் இருக்கின்ற கருத்தியல், சொல்லாடல், பண்பாட்டு, பதிலி நெருக்கடிகள் என்பவற்றை நாம் எதிர்நோக்குகின்றோம். குறிப்பாக உலக மயமாக்களின் ஊடாக பதிலிகளைப் பிரித்தறிவது கூட கஷ்டமாக இருக்கின்றது. நாம் கொப்பி பன்னூகிறோமா உண்மையில் பதிலிதானா என்பதை அறிவது கூட நெருக்கடியான சூழல்.

இந்தக் காலகட்டத்திற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டும். ஆரம்பத்தில் எங்களுக்குள்ளும் மாக்ஸியம் இருக்கிறது. இஸ்லாமிய சோஷலிஸம் என்றெல்லாம் பேசினார்கள். பிறகு இஸ்லாமிய சோஷலிஸம் அல்ல. இஸ்லாம் சொல்கின்ற பொருளாதாரக் கொள்கை சோஷலிஸ பொருளாதாரக் கொள்கையிலிருந்தும் முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கையிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டது. அது கலப்புப் பொருளாதாரமும் அல்ல என்று ஏனைய பொருளாதார கொள்கையின் ஓட்டைகளைக் கண்டுபிடிக்கின்ற நிலைக்கு வந்திருக்கின்றோம். காலம்தான் சிந்தனைப்

பாரம்பரியத்தில் ஏற்படுகின்ற நிலை மாறுகட்டமாகும். அத்தகைய கட்டத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது எனது கருத்தாகும்.

## 4

### முஸ்லிம்தேச இலக்கியம் என்று தனித்துவ அடயாளங்களுடன் பேச வெளிக்கிடுகின்ற நேரம் இது ஒரு அடிப்படைவாதக் கூச்சல் என்று சொல்கின்ற குரல்கள் மாற்றுத்தரப்பினரால் முன்வைக்கப்படுகின்றன. இது குறித்து ஏதாவது கருக்குக் கூறவுள்ளதா?

உங்கள் கேள்வியில் இரண்டு விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக நான் நினைக்கிறேன். ஒன்று முஸ்லிம் தேச இலக்கியம், இஸ்லாமிய இலக்கியம், முஸ்லிம் இலக்கியம் என்ற கருத்தியல். அடுத்தது அடிப்படைவாதம். ஆரம்பத்தில் தமிழ் இலக்கியம் என்பது ஒரு பெரும் கதையாடலாகத்தான் அல்லாமா உவைஸுக்கு முன் இருந்துவந்தது. இவர் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களை ஆவணப்படுத்தி பட்டியலாக்கம் செய்து பல பாகங்களாக வெளியிட்ட பின்னர்தான் இந்த இஸ்லாமிய தமிழ் இலக்கியம் என்ற பகுதி தமிழ் தரப்புக்களால் அங்கீகரிக்கப்படுகின்ற நிலையையும் அல்லது மறுத்துப் பேசமுடியாத ஒரு மௌன நிலையையும் ஏற்படுத்தியது. ஆனால் அன்மைக்காலமாக நீங்கள் குறிப்பிடுவதைப் போல இஸ்லாமிய புணருத்தான, சீர்திருத்த அமைப்புக்கள் வந்து எழுச்சி ஏற்பட்டதன் பின்னர் முஸ்லிம் தேச அடையாளத்தை நோக்கிய நகர்வை கடந்த காலங்களில் பார்த்த அவர்களில் பேரப்பிள்ளைகள்தான் இஸ்லாமிய இலக்கியத்தை முஸ்லிம்கள் தமிழுக்கு பங்காற்றவில்லை அல்லது அவர்கள் ஆற்றிய பங்கை மறுத்து வந்த மூத்தப்பாமார்களின் வழிவந்தவர்களாக அமெரிக்கச் சார்புக் கண்களினூடாக, அடிப்படைவாத பார்வையினூடாக இஸ்லாமி எழுச்சியினூடாக வருகின்ற அடையாளத்தையும் புத்துரணர்ச்சி பெறுகின்ற முஸ்லிம் தேச இலக்கியத்தையும் முன்னரைப்போல மறுக்க முற்படுகிறார்கள்.

அல்லாமா உவைஸ் அவர்கள் இஸ்லாமிய இலக்கியத்தை பட்டியலாக்கம் ஆக்கம் செய்து ஒரு விபரணத்தொகுப்பாக ஆக்கினாரே தவிர அவர் இவ்விலக்கியத்தை ஒரு திறனாய்வு செய்யவில்லை. அது இஸ்லாமிய பண்பாட்டு மரபுக்கு அமைவான, அல்லது முஸ்லிம் தேச அரசிலை முழுமையாக வெளிப்படுத்துகின்ற இலக்கியமா என்பதை அவர் ஆழமாகச் செய்யவில்லை. எனவே புதிய தலைமுறை அத்தகைய ஒரு திறனாய்வைச் செய்வதற்கு இஸ்லாத்தையும் இஸ்லாமிய எழுச்சியினூடாக வரும் பார்வைகளையும் இணைத்து தங்களை ஒரு தேசமாக வடிவமைக்க முயற்சிக்கின்றார்கள். அதன்போது வருகின்ற பண்பாட்டு சவால்களுக்கு மத்தியில் இருந்து சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றார்கள்.

எனவே அதனை பகுப்பாய்வு செய்ய முற்படுவது அதனை தமிழ் இலக்கியத்திலிருந்து வேறுபட்டு நிற்கின்ற கூறுகளை இனங்காட்ட விளைவது என எல்லாம் அவர்களுக்கு மூக்கின்மேல் கோபத்தை வரவழைக்கின்றது என நினைக்கின்றேன். அனைத்து இலக்கியங்களையும் தொகுக்கின்ற பட்டியலிடுகின்ற காலமாக உவைஸின காலத்தை நாங்கள் குறிப்பிட்டால் பெருவெளியின் காலத்தை தனித்துவமாக அடையாளம் காட்டி

முஸ்லிம் தேசத்தின் கூறுகளை நுட்பமாக ஆராய்ந்து அது தமிழ் தேச இலக்கியத்திலிருந்து எவ்வாறு வேறுபட்டு ஒரு இலக்கியத்தேசத்தை தனித்துவத் தேசமாக தன்னை உருவகித்துக் கொள்கிறது எனக் குறிப்பிடலாம். இதனோடு சேர்த்து முஸ்லிம்தேச அழகியல் தனியாகப் பேசப்படவேண்டியதாகும்.

உங்களுடைய கேள்வியின் அடுத்த பகுதி அடிப்படைவாதம் பற்றியது. இந்தச் சொல் உண்மையில் கிறிஸ்தவ அடிப்படைவாதத்தை குறிக்கின்ற ஒரு சொல்லாகத்தான் மேற்கிலே ஆரம்பத்தில் முகிழ்த்தது. பின்னர் எல்லா மதங்களையும் கிறிஸ்தவம் போல கருதிக்கொண்டு இஸ்லாத்தை நோக்கியும் அச்சொல்லாடலை பயன்படுத்தத் தொடங்கினார்கள். அடிப்படைவாதம் என்பது அல்குர்ஆனையும் முஹம்மதையும் முழுமையாகப் பின்பற்றிய ஒரு வாழ்க்கைமுறைதான் என்றால் நாங்கள் எந்தப் பயமும் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் முஹம்மத் ஒரு பயங்கரவாதியல்ல. உலகத்தில் ஆன்மாவையும் லௌகீகத்தையும் ஒருங்கே இணைத்த ஒரு யதார்த்த சமூகத்தை தன்னுடைய வாழ்நாளில் உருவாக்கிக் காட்டிய, மனித இன வரலாற்றில் செல்வாக்குச் செலுத்திய நூறுபேரில் ஜீஸஸை விடவும் காந்தியை விடவும் முதன்மையானவா் என மைக்கல் எச். ஹாா்ட் அவா்கள் குறிப்பிட்டிருக்கிறாா்கள். அடிப்படைவாதம் அதுதான் என்றால் நாங்கள் அஞ்சத்தேவையில்லை. ஆனால் அவா்கள் எந்த அடிப்படைவாதத்தைச் சொல்கிறாா்கள் என்பதுதான் பிரச்சினை. இல்லாத ஒரு மோதலை சாமுவல் ஹன்டிங்டன் ஊடாக உருவாக்கப் பாா்க்கிறாா்கள். நாகரிகங்களுக்கிடையிலான மோதல் என்பதை இப்போது இஸ்லாமியவாதிகள் நாகரிகங்களுக்கிடையிலான உரையாடல் என்று மாற்றிவிட்டாா்கள். எனவே அவா்கள் மீண்டும் அடிப்படைவாதம் என்ற சொல்லை தங்களுடைய பட்டியலில் இணைத்து ஒற்றைக் கலாசாரத்தை ஒரு துருவம்தான் இணைக்கிறது என்ற அனைத்தின் மீதான திணிப்பதற்கான முயற்சியைச் செய்கிறாா்கள் என்று நினைக்கிறேன்.

# 5

## தலித்துகள் நிலைப்பட்ட அடிப்படையில் முஸ்லிம்கள் இடத்திலும் சாதி வேறுபாடுகள் இருப்பதாக கூறப்படும் கருத்துக்கள் பற்றி என்ன நினைக்கிறீா்கள்?

இன்றைக்கு உலக அளவில் கூட முஸ்லிம்கள் தலித்துகலாகப் பாா்க்கப்படவேண்டிய ஒரு சூழல் இருக்கின்றது. தலித்துக்களுக்குள்ளும் ஏற்றத்தாழ்வுகள், சமூகச்சமவீனங்கள் இருப்பது வழமை. ஆனால் இரண்டு பகுதிகள் இதில் முக்கியம் பெறுகின்றன. ஒன்று இஸ்லாமிய வாழ்வியல் சாா்ந்த கோட்பாடுகள். இன்னொன்று அன்றாட யதாா்த்த நிலை.

மற்ற சமயங்கள், பண்பாடுகளைப் பெறுத்தவரையில் அதன் மூலாதாரக் கோட்பாட்டு விளக்கத்திலேயே சாதியத்திற்கான அடிப்படைகள் விதைந்துரைக்கப்படுகின்றன, முன்மொழியப்படுகின்றன. நிபந்தனைகளாக வரையறுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இஸ்லாமிய மூலாதாரங்களில் அப்படியான வாசகத்தையேனும் காணமுடியாது. பல்வேறு சமூகங்களுக்குள்ளால் இஸ்லாம் ஊடுகலக்கின்ற போதுதான் பிறபண்பாட்டு கலாசார தாக்கங்களுக்கு உட்படுகின்றது. அதற்கு முஸ்லிம்களும் பலியாகியிருக்கின்றாா்கள். எனவே

இஸ்லாத்தில் ஒரே நேரத்தில் ஐக்கியம், ஒற்றுமைக்காகக் குரல்கொடுக்கின்ற பேசுகின்ற நிலை இருக்கின்ற போது உள்ளகச் சமூகச்சமவீனங்களுக்காகவும் குரல் கொடுக்க வேண்டும். அதுவும் அதிகாரத்திடம் உண்மையைப் பேசல் என்று நபி அவர்கள் குறிப்பிடுகின்ற போது ஆகப்பெரிய சாத்தான் அநீதி இழைக்கப்படும் நிலையில் மௌனம் சாதிப்பவனே என்றும் சொல்கிறார்கள்.

ஒட்டுமொத்த சமூகமும் இந்துத்துவத்தால் ஒடுக்கப்படுகின்ற சூழலில் இந்துத்துவத்தை எதிர்கொள்வதுதான் தமிழக மக்களின் முதன்மைப் பணியாக இருக்கும். அதனோடு சேர்ந்தவாறாகத்தான் இந்த உள்ளகப்பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டும். அங்குள்ள முதன்மைப் பணி இலங்கை முஸ்லிம்களுக்கும் இருக்கும் என்று சொல்ல முடியாது. இவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினை அவர்களுடைய வரலாறு பண்பாடு அரசியல் சூழலில் இருந்து மாறுபட்டதாக அமையும். உதாரணமாக அங்கு இந்துத்துவம் மேலாதிக்கம் செலுத்துகின்றது. அங்கு ஒடுக்கப்படும் தலித்துகளுக்குள் பௌத்தர்கள், சமணர்கள் இருக்கிறார்கள். ஆனால் இலங்கையைப் பெறுத்தவரையில் முஸ்லிம்கள் இந்துத்துவம் உட்பட பௌத்த பேரினவாதத்தாலும் ஒடுக்கப்படுகின்ற நிலை காணப்படுகின்றது.

இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை சாதிய அமைப்பு என்பது இந்திய அல்லது தென்னிந்திய சாதிய அமைப்புப் போன்ற இறுக்கமான அமைப்பில் இல்லை என்பதுதான் எங்களுடைய மனத்தயாரிப்பினூடாக வருகின்ற அனுபவக் கருத்து. ஒரு காலத்தில் கத்னா செய்பவர்கள், முடிதிருத்துகின்ற தொழிலைச் செய்கின்றவர்கள் விடயத்தில் சற்றுக் குறைவான சமூகச்சமவீனம் நிலவியது. அது 20-30 ஆண்டுகளுக்கு முன் நிலவிய சூழல். அது தற்போது மறைந்து முஸ்லிம் பெருங்குடி மக்களைச் சேர்ந்தவர்களே முடிதிருத்துபவர்களாக நவீன கருவிகளோடு வந்து பணியைச் செய்யக்கூடிய நிலை காணப்படுகின்றது. கண்டுபிடிப்புச் செயற்பாடுகளுக்கேற்ப அது தனிநபர் செயற்பாடாக, சுத்திகரிப்பாக மாறியிருப்பதையும் அவதானிக்கலாம். புதிதாக இஸ்லாத்தை தழுவுகின்றவர்களை மௌலா இஸ்லாம் என்ற சொல்லாடலால் அடையாளப்படுத்தினார்கள். இப்போது அந்த சொல்லாடலும் முஸ்லிம் தரப்பில் மறைந்து அவர்களை சமமாக மதிக்கின்ற சூழல் அதிகரித்து வருகின்றது இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் சமத்துவத்தை அவர்களது வழிபாட்டு அம்சத்திலேயே காண முடியும். ஆனால் ஆலயப்பிரவேசம் கூட இன்னும் இந்துத்துவத் தலித்துகளுக்கு இந்தியாவில் வழங்கப்படவில்லை.

திருமண விடயங்களில் மாத்திரம் இத்தகைய நிலை சில நேரம் காட்டப்பட்டாலும் அதே நபர் நன்கு கற்று டொக்டராகவோ இஞ்ஜினியராகவோ மாறிவிட்டால் அவரது பூர்வீகத்தைப் பற்றியோ வேர்களைப் பற்றியோ தேடமாட்டார்கள்.

## 6

**மேலைத்தேய கோட்பாடுகளில் குறிப்பாக பின்நவீனம் போன்றவற்றை முஸ்லிம்தேசம் உள்வாங்குகின்ற விடயம் இன்று பன்முக வாசிப்பை வேண்டிநிற்கின்றது. இது பற்றிய உங்களின் பார்வை என்ன?**

மேற்கத்தேய சிந்தனைப் போக்குகள் எங்களுக்குச் சாதமாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. நாம் அவற்றை படிப்பதினூடாக, எங்களுக்குள்ளாக இருக்கின்ற சிந்திப்பு முறைகளை, வாசிப்பு முறைகளை மீட்டச்சொல்லாடல்களை தங்கவைத்து இதனூடாக வரும் காலணித்துவத்தில் இருந்து விடுபடலாம்.

பின்நவீனத்துவம் என்ற சிந்தனைப் போக்கு, அதில் தனிப்பிரதிவாதங்கள் இருந்தாலும் அது மனிதனுடைய அறிவின் பின்னொரு கட்டம்தான். இதனை உதாசீனப்படுத்த வேண்டிய தேவையோ, ஹராம் என்றோ, விரோதமானது என்றோ சொல்லவேண்டிய அவசியமில்லை. மனிதன் தன்னுடைய சமூகவாழ்க்கைப் பிரச்சினைகளின் போது புதிய தியரிகளையும் கோட்பாடுகளையும் கண்டடைகிறான். இந்தளவில் அது அவசியமானதும் தேவையானதும் கூட. ஒரு காலத்தில் நவீனத்துவம் பிரச்சினைகளுக்குத் தீர்வாக இருந்தது. அது இன்னொரு காலத்தில் அதிகாரமாக மாறி பாசிச முகம் எடுத்தது. இதற்கு மாற்றீடாக புதிய சிந்தனைகளை உருவாக்க வேண்டிய தேவை இருந்திருக்கிறது.

நாங்கள் அரசியல் ரீதியாக அடைந்த தோல்வி அல்லது அந்நிய ஆக்கிரமிப்பு, எங்களுக்குள் இருந்த உட்பலவீனங்களால் ஏற்பட்ட தோல்வி எல்லாம் சேர்ந்து எங்களது அல்குர்ஆனினது வாசிப்பையும், இஜ்திஹாத்தையும் (சட்டரீதியான) தேக்கநிலைக்குக் கொண்டுசென்ற நேரம் நாங்கள் மாற்று முகாம்களில் சிந்தனைகளை இரவலாகப் பெறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். எனவே மேற்குலக சிந்தனைகளில் சாதகம், பாதகம் இரண்டு முண்டு எல்லாவற்றையும் பிரதிகூலமாக நினைத்து புறமொதுக்குகின்ற போக்கு முஸ்லிம் உலகத்திற்குள்ளும் உண்டு. இரண்டுக்கும் இடையில் நின்று மூன்றாவது பாதை அமைத்து செயற்படுவோரும் உண்டு. அப்படியான புத்திஜீவிகளின் படைப்புக்களும் ஆக்கங்களும் இஸ்லாமிய வரலாற்றில் நிறையவே வெளிவந்திருக்கின்றன.

பின்நவீனத்துவ சிந்தனைகளைப் படித்து குர்ஆனுக்கு இத்தகைய வாசிப்பை முன்வைத்த நிலை லெபனான், ஜோர்தான் போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இஸ்லாமிய வரலாற்றில் பஹுருத்தீன் அர்ராஸி என்பவர் பல்வாசிப்புகளை நோக்கி ஒரு வாசகனை நகர்த்தக்கூடிய குர்ஆன் விளக்கமுறையை பல நூற்றாண்டுகளுக்கு முந்தியே எழுதியிருக்கிறார். இன்றைய சிந்தனைகளைப் படித்துக் கொண்டு போனால் குர்ஆனை இப்படியும் வாசிக்கலாம் என்ற நிலை வருகின்றது. பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நோக்கி அதன் வசனங்கள் நகர்வதையும் காணலாம். அல்குர்ஆனை விளங்கிக் கொள்வது என்பது மனித அறிவு எந்தளவுக்கு வளர்ந்து செல்கிறதோ அந்தளவுக்கு அது விளக்கங்களை பதினான்கு நூற்றாண்டுகளாக கொடுத்துக்கொண்டே வந்திருக்கின்றது. மனித அறிவுத்தரம், மனப்பாங்கு நிரப்பப்பட்டிருக்கின்ற இடத்தில் இருந்து அவனை அழைத்துச் செல்லக்கூடிய ஆற்றல் அல்குர்ஆனுக்குண்டு.

## 7

**முஸ்லிம்தேச பெண்ணியம் பேசப்படுகின்ற சூழலில் பெண்களுக்கான விருத்தசேதனம் தொடர்பில் முஸ்லிம் சமூகத்தின் மீது பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இது பற்றிய உங்களின் பார்வை என்ன?**

விருத்தசேதனம் என்பது அரபு மொழியில் கத்னா என்று சொல்வார்கள். இந்த மரபை உலகத்திற்கு முதலாவதாக தொடக்கிவைத்தவர் இப்றாஹீம் அலை அவர்கள். அப்ரஹா என்று பழைய ஏற்பாடு இவரைக் குறிப்பிடுகின்றது. இதைத்தொடர்ந்து வந்த பரம்பரையில் வருகின்றன முஹம்மத் ஸல் அவர்களுடைய சமூகமும் இந்த மரபை தொடர்ந்து பேணி வருகிறது. இஸ்லாமிய சட்ட அடிப்படையில் நோக்கும் போது ஆண்கள் விருத்த சேதனம் செய்வதுதான் சுன்னாவாக அதாவது இஸ்லாமிய சட்ட அந்தஸ்தில் – செய்தால் நன்மை. செய்யாவிட்டால் குற்றமில்லை என்ற தரத்தில் உள்ளது. இதனால்தான் சுன்னத் என்ற சொற்பிரயோகம் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பயன்படுத்தப்படுகிறது. இஸ்லாமிய சட்ட சிந்தனைப் போக்கில் பெண்களுக்கு விருத்த சேதனம் செய்வற்கு தனியான எந்த வசனமும் கிடையாது. அல்குர்ஆனிலோ நபியின் வசனங்களிலோ தெளிவான திட்டவட்டமான ஆதாரமும் இதற்கில்லை. அதை இரண்டு அடிப்படையில் இஸ்லாமிய சமூகம் வரலாறு நெடுகிலும் பின்பற்றி வந்துள்ளது.

ஒன்று – கியாஸ் என்ற சட்டமூலாதாரத்தைப் பயன்படுத்தி – இப்றாஹீம் நபி அவர்களுடைய விருத்த சேதன விடயத்தை முஹம்மத் ஸல் அவர்கள் அறிமுகப்படுத்தியதைப் போல ஆண்களுக்கு விருத்த சேதனம் செய்ய முடியும் என்றால் அதே போன்று பெண்களுக்கும் செய்யலாம் என்பதை கியாஸ் அடிப்படையில் இன்னும் சட்டப்பகுதிகளிலும் ஒன்றிப்பு காணப்படுவதால் இவற்றை இஸ்லாமிய சட்டமரபு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இஸ்லாம் அரபு தீபகற்பத்திற்கு வெளியில் ஆபிரிக்கா இந்தியா போன்ற நாடுகளுக்குப் பரவிய போது அங்கு ஏற்கனவே மக்களின் பழக்கவழக்கங்களாக குறிப்பாக பெண்களுக்கு விருத்த சேதனம் செய்கின்ற பழக்கம் மரபு ரீதியாகப் பின்பற்றப்பட்டு வந்தது. இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களில் வழக்காறு ஒரு சமூகத்தினருடைய மரபும் சட்டமாக அங்கீகரிக்கப்படுகின்ற ஒரு நிலையில் ஏற்கனவே முன்னைய சமூகங்கள் பின்பற்றுகின்ற சமூக மரபுகளை இஸ்லாமிய சட்டமானது அதற்கு முரணான கருத்துக்கள் இல்லாத நிலையில், மனித நலனுக்கு உகந்ததாக இருக்கும் பட்சத்தில் அந்த வழக்காறுகளை அங்கீகரித்தல் என்ற வகையில் விருத்த சேதனம் இஸ்லாமிய சமூகத்தினுள்ளே வருகின்றது.

இங்கு மாற்றுப் பண்பாட்டை இஸ்லாமிய சட்டம் எந்தளவுக்கு மதிக்கிறது என்பதனை மாணவர்கள், வாசகர்கள் புரிந்துகொள்வார்கள். அதேநேரத்தில் இதனுடைய நவீனத்துவ, பின்னவீனத்துவ, விஞ்ஞான ஏற்பு முறைகள் அடிப்படையில் பார்க்கின்ற போதும், பெண்ணிலைவாத விமர்சனங்களுக்கு மத்தியில் வைத்துப்பார்க்கின்ற போதும் பெண்களுக்கு விருத்தசேதனம் செய்வதும் இஸ்லாத்தின் அடிப்படை அம்சமல்ல. அது இஸ்லாமியர்களின் பண்பாட்டம்சமாகத்தான் வெளிப்படுகிறது. எனவே அதை இஸ்லாத்தின் மீதான விமர்சனமாக முன்வைக்க முடியாது.

அதே நேரத்தில் பெண்களுக்கு விருத்த சேதனம் செய்வதை மருத்துவ, உடலியல் ரீதியாக பார்த்தால் குறிப்பாக மருத்துவ உலகிலும் பொய்பிக்கப்படாத திட்டவட்டமான உண்மைகள் என்ற நிலை வருகின்ற போது அது விஞ்ஞானமாக கூறப்படுகின்றது. இந்தவிடயத்தில் மருத்துவர்கள் இரண்டுவிதமான கருத்துக்களைக் கொண்டுள்ளார்கள். பெண்களுக்கான

விருத்தசேதனம், சுகாதாரம், ஆரோக்கியத்தைக் கொடுக்கின்றது என்று ஒரு சாரார் சொல்கின்றனர். இதற்குப் பல்வேறு பூகோள, புவியில் எல்லைகளையும் அங்கிருக்கின்ற சீதோஷ்ண காலநிலை, வியர்வை போன்றவற்றையும் காரணம் காட்டுகின்றனர். விருத்தசேதனம் செய்வதனுடாக வியர்வை கூடிய பிரதேசங்களிலும் பெண் உறுப்பிலே ஏற்படுகின்ற சுரப்புகள் காரணமாக ஒரு துர்வாடை வீசுவதாகவும் இதன்மூலம் பெண்கள் துர்வாடையிலிருந்து பாதுகாக்கப்படுவதாகவும் கூறுகின்றனர். மற்ற சாரார் இதனால் பெண்ணுடைய பாலியல் உணர்வு குறைவதாகக் குறிப்பிடுகின்றனர். இமாம் இப்னுத் தைமியா என்ற ஒரு பழைய அறிஞர் சொல்கிறார் நவீன எழுச்சியை இவரின் காலத்தில் இருந்து பார்ப்பவர்களும் உண்டு. பாலியல் உணர்வு கூடியதன் காரணமாக கணவனை விட்டுவிட்டு ஓடிச்செல்கின்ற நிலையில், பல ஆண்களை நாடக்கூடிய நிலை பெண்களுக்கு ஏற்படுகிறது. குடும்ப அமைப்பும் அங்கு சீர்குலைகிறது. அதனை நிவர்த்திப்பதற்காகவே இதனை நாம் மேற்கொள்கிறோம் என்று குறிப்பிடுகின்றார். எப்படி இருப்பினும் பெண்களுக்கு விருத்த சேதனம் செய்ய வேண்டும் என்பது இஸ்லாத்தின் திட்டவட்டமான கருத்து அல்ல. இஸ்லாத்தை பின்பற்றுகின்ற, இஸ்லாமிய வாழ்க்கை வாழ்கின்ற ஒரு பெண்ணுக்கு விருத்த சேதனம் செய்யாமல் வாழ்வதற்கான உரிமையை இஸ்லாம் வழங்கியிருக்கின்றது.

அண்மையில் முஸ்லிம்களுக்கு மத்தியில் இஸ்லாமிய சிந்தனைப்பரவல் ஏற்பட்டு வருகின்ற வட்டாரங்களில் குடும்பங்களில் பிறக்கின்ற பெண்குழந்தைகளுக்கு இரண்டு தசாப்பதங்களுக்கு மேலாக விருத்தசேதனம் செய்யாத ஒரு போக்கு நிலவி வருகிறது. எனவே இதனை விமர்சிக்கின்றவர்கள் முஸ்லிம்சமூகத்தின் பண்பாட்டு அசைவுகளை மிகக்கவனமாகப் பார்த்து விமர்சனம் செய்ய வேண்டும்.

அதேபோன்று ஒரு பண்பாட்டு மரபுக்குக்கூட விஞ்ஞானத் தன்மை இருக்கிறது. மேற்கத்திய நோக்கில் இது விஞ்ஞானம், விஞ்ஞானம் அல்லாதவை என்று நோக்காமல் எங்களுடைய பாரம்பரியத்தில் இருப்பவற்றுக்கு என்ன விஞ்ஞானம் இருக்கிறது என்பதை நாங்கள் தேடிப்பார்க்கின்ற தேவை இருக்கின்றது. அந்த இடத்தில் வைத்து பார்க்கும் போது மற்றெல்ல பண்பாடுகளையும் விட மதங்களையும் விட பெண்களை உயர்த்திவைக்கின்ற, அதை நடைமுறையிலும் பெருமளவிற்கு காணக்கூடியதான நிலை என்றால் அது முஸ்லிம்களுக்கு மத்தியில்தான் காணப்படுகின்றது. பெண் அடிமைத்துவத்தை இஸ்லாம் வலியுறுத்தவில்லை. நான் பார்க்கிறேன் இந்து மதத்திலே 23 க்கும் மேற்பட்ட சட்டங்கள் பெண்ணை ஒரு மனித உயிரியாகவே மதிக்கவில்லை என்பதை சொல்கிறது. மாதாந்த ருதுவைக் கூட அது ஏற்பட்டால் தனியாக கிடுகளால் கூரை கட்டி உட்கார வைக்கின்ற வழக்கம் இன்றும் எங்களுடைய தமிழ்பிரதேசங்களில் இருக்கின்றது. குழந்தைகள் ஏன் அந்த அக்காவை ஒதுக்கி வைக்கிறீர்கள் என்று கேட்டால் அந்த அக்காவின் தலையில் காக்கா எச்சமிட்டுவிட்டது என்று சொல்வார்கள்.

**முஸ்லிம்தேச பெண்களின் ஆடை தொடர்பானது. உலகலாவிய அளவில் இது குறித்து பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுக் கொண்டு இருக்கும் நிலையில் பெண்களின் ஆடைகள் பற்றிய வரையறைகளை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

எப்போதும் ஒரு சமூகச்சூழலில் ஒரு வினைக்கு எதிர்வினை இருக்கும். மாற்றை அங்கீகரிக்காத போது, விரும்பாத போது மாற்றுக்கருத்தை ஒழிக்க முயல்கின்ற போது அதற்காகப் போராடுகின்ற குழுக்கள், எதிர்ப்பண்பாடுகள் என்பன நிச்சயமாக உருவாகும். அந்தவகையில் இதனை அணுகுவதாக இருந்தால் மேற்குலகம் முழுமையாக திறந்துவிட்டு நிர்வாண கோலத்தோடு திரிகின்ற போது அதற்கு எதிர்ப்போக்கை கடைப்பிடிக்கின்ற கீழைத்தேய உலகில் குறிப்பாக முஸ்லிம் பண்பாட்டில் இத்தகைய மூடுதல் முறையை நாங்கள் நியாயப்படுத்த முடியும்.

ஆடைக்கலாச்சாரத்தைப் பொருத்தவரையில் அது பற்றி வந்திருக்கின்ற அனைத்து அறிவித்தல்களும் லயீபானதாகும் (பலவீனமானதாகும்) என்பதுதான் ஏகோபித்த முடிவு. இதை விளக்குவதாக இருந்தால் நபி ஸல் அவர்களோ, அல்குர்ஆனோ அவ்ரத்தைத்தான் (கட்டாயம் மறைக்கப்படவேண்டிய உடற்பகுதிகள்) வரையறுத்திருக்கிறது. உடலின் எந்தப் பாகம் மறைக்கப்பட வேண்டும் என்பதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். என்ன ஆடையால் மறைக்க வேண்டும் அதற்கு என்ன நிறத்தை தெரிவு செய்ய வேண்டும் என்று கூறவில்லை. அவ்வப்பூகோள, சீதோஷ்ண, தட்பவெப்ப நிலைகளுக்கு ஏற்ப அது தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதுதான் இறைத்தூதரினதும், இறை வெளிப்பாட்டினதும் கருத்துக்கள். ஏனெனில் உலகம் தழுவிய தூதாக இஸ்லாம் இருப்பதால் மானிட சமூகத்தை நோக்கி அழைப்பு விடுப்பதால் அது எல்லாப் பண்பாட்டுச் சூழலுக்கும் ஒத்திசைவாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் இறைவன் அந்தவிடயத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறான். எனவே முகத்தை மூடி பெண்கள் ஆடை அணிவதற்கு அல்குர்ஆனில் எந்தவொரு சட்ட வசனமும் கிடையாது. நபிகளாரின் காலத்தில் தற்போதைய கப்டன் போன்ற ஒரு ஆடையைத்தான் பெண்கள் அணிந்திருந்தார்கள். அது மார்புப் பகுதி வெளித்தெரியக்கூடியதாக இருந்தது. எனவே உங்கள் மார்பகங்களுக்கு மேலால் முந்தானையைப் போட்டுக்கொள்ளுங்கள் என்றுதான் வசனம் இறங்கியது. உங்கள் முகங்கள் மீது முந்தானையால் மூடுங்கள் என்று அல்குர்ஆனின் எந்த வசனங்களும் குறிக்கவில்லை. அதேபோன்றுதான் 15 க்கும் மேற்பட்ட ஹதீஸ்கள், அல்குர்ஆனுக்கு அடுத்ததாக சொல்லப்படுகின்ற ஷஹீஹுல் புஹாரி கிரந்தத்திலே இதுபற்றி பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே அரபுநாட்டில் உயர்குலப் பெண்கள் குறிப்பாக கோத்திரங்களின் தலைவிமார் பெண் மக்களுடைய ஆடைகளைத்தான் இத்தகைய முகத்தை மறைத்தல் என்ற பண்பாடு இருந்தது. அதனையும் நபித்தோழர்கள் வினோதமாகப் பார்த்தார்கள் என்றும் அறிவிப்புக்கள் வந்திருக்கின்றன. ஒரு பெண் தன்னுடைய மகன் மரணித்த சம்பவத்தில் நபியை சந்தித்தபோது முகத்தை மூடிக்கொண்டிந்தார்கள். நபித்தோழர்கள் ஏன் நீங்கள் முகத்தை மூடிக்கொண்டிருக்கிறீர்கள் எனக் கேட்ட போது எனக்கு மகன் மரணித்தும் நாணம் என்னைவிட்டு இன்னும் அகலவில்லை என்று கூறினார்கள்.

எனவே முகத்தை மூடிக்கொண்டு ஒரு சமூகப்பணியை ஆணும் பெண்ணும் செய்ய முடியாது. அதுவும் பல்லினத்தன்மை, பல்கலாச்சாரங்களைக் கொண்ட சமூகங்களுக்கு மத்தியில் கூடிவாழல் என்ற முறையியல் இருப்பதால் எங்கள் முகத்தை மூடுதல் என்ற பகுதியை விட்டுக் கொடுக்க வேண்டும். இஸ்லாமிய சட்ட மரபுகள் எல்லாமே முகம், கை, கால் பகுதிகள் திறந்திருப்பதனை வலியுறுத்துகின்றன. ஹஜ்ஜிலே முகத்தை மூடுவது கிடையாது. கட்டாயம் திறக்க வேண்டும். பொருளாதாரம் சுதந்திரம் பெண்ணுக்கிருப்பதால் அவள் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற போது முகத்தை கண்டிப்பாகத் திறக்க வேண்டும். அப்போதுதான் இஸ்லாமிய வியாபரமுறை செல்லுபடியானதாக மாறும். கல்வி கற்றல், கற்பித்தல் பெண்கள் முகத்தைத் திறக்க வேண்டும்.

இமாம் இப்னு ஹஸ்ம் அவர்களுக்கு ஆண்களே படிப்பிக்கவில்லை. அந்தப்புரத்திலே இருந்த பெண்கள்தான் படிப்பித்தார்கள். முன்னூறுக்கும் மேற்பட்ட சிந்தனையாளர்கள், ஹதீஸ்துறை விற்பன்னர்கள் இஸ்லாமிய வரலாற்றில் இருந்திருக்கிறார்கள். இவர்களைப் பற்றி அறபு அறிஞர் ஒருவர் தனது காலநிதிப் பட்டத்தை முடித்திருக்கிறார். ஒரு பெண்ணின் எல்லாப் பாகங்களும் திறந்திருக்கிறது என்பதால்தான் பார்வையை தாழ்த்தும்படி நபி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். முதல் பார்வை அந்தப் பெண் யார் என்று அறிவதற்கான பார்வை. தொடர்ந்து தீயநோக்கோடு பார்க்கும் பார்வையைத்தான் நபி அவர்கள் தடுத்திருக்கிறார்கள். கண்ணும் கண்ணும் மோதக்கூடாது. மூடிக்கொண்டு போகவேண்டும் என்றால் உடலும் உடலும் மோதிக்கொண்டுவிடும்.

லெபனானைச் சேர்ந்த பைஸல் மௌலவி அவர்கள் பலஸ்தீனத்திலே முகத்தை மூடிக்கொண்டு ஒரு பெண் தற்கொலைத் தாக்குதலுக்குச் சென்றால் அங்கிருக்கின்ற இஸரேலியச் சிப்பாய்கள் சும்மா விடுவார்களா? எனவே தன்னுடைய தாயகத்தை மீட்க வேண்டுமென போராடுகின்ற போராளிப் பெண் தன் அழகியலுக்காக அணியப்படுகின்ற இந்த ஆடையை நூறுவீதம் தலைக்குமேல் தூக்கிப்பிடித்துக் கொண்டிருந்தால் அவளுடைய நாட்டை விடுவிக்க முடியாது என்று குறிப்பிடுகின்றார். இது போன்ற ஷேக் முஹம்மது அல் ஹஸ்ஸாலி அவர்கள் குறிப்பிடும் போது அன்னியர்கள் இந்த இரண்டு மீட்டர் துணி இல்லாவிட்டால் இஸ்லாம் எவ்வளவு நல்ல கொள்கையாக இருக்கும் என்று சொல்வது எனக்குக் கேட்கிறது என்று கூறுவதும் கவனிக்கத்தக்கது.

குறிப்பாக அறபு இஸ்ரேலிய யுத்தம் நடைபெற்று பத்து ஆண்டுகள் கழித்து மத்திய கிழக்கிற்கு அருகில் உள்ள ஈரானில் ஒரு புரட்சி ஏற்பட்டது. அது அரசியல் புரட்சியாக மட்டும் அமையவில்லை. பண்பாட்டுப் புரட்சியாகவும் வெளிப்பட்டது. அதன் விளைவாக ஈரானை புரட்சிக்கு முன்பு ஆதரித்த பல்வேறு நாடுகள், அமைப்புக்கள் தங்களது நாட்டிலும் அப்புரட்சிகளை உள்வாங்க ஆரம்பித்தன. எனக்குத்தெரிந்த வகையில் 80களின் ஆரம்பத்தில் இலங்கையில், குறிப்பாக ஈரான் தூதுவரலாயத்தின் ஊழியர்களால் ஹிஜாப், கருப்பு ஆடை என்பன அறிமுகப்படுத்தப்பட்டன. அதன் பின்னரே பர்தா முறையும் வந்தது. இதனூடாக வருகின்ற ஆடைப்பண்பாடு அந்நாட்டுக்குரிய கலாசார வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது.

குறிப்பாக அப்பாஸியர் காலப்பகுதியில் கருப்பு உடைக்கு ஒரு பெருமானம் இருந்தது. ஒரு சலவைத் தொழிலாளி இதன் நிரத்தை மாற்றினால் அதற்குரிய பிணக்குகளைத் தீர்த்தல்

என்பது இஸ்லாமிய சட்டப்பகுதியில் இடம்பெற்றிருக்கிறது. அவர்களுடைய குளிர்வலயப் பிரதேசத்தில் அத்தகைய ஆடை முறை இருந்திருப்பதில் நியாயமுண்டு. முற்றிலும் வெப்பமான, மத்திய கோட்டிற்கு அருகில் வாழ்கின்ற எங்களைப் பொருத்தவரையில் அத்தகைய கருப்பு ஆடை முறை உடலியல், தோல் ரீதியான அசௌகரியங்கள் உருவாக காரணமாக அமைகிறது. இது பற்றிப் பேசவேண்டிய தேவையும், கடும்நிறங்கள் அல்லாதவற்றை எமது இலங்கை கலாசாரத்திற்கு இணைவான முறையில் அறிமுகப்படுத்த வேண்டிய தேவையும் இருக்கிறது. இஸ்லாத்தைக் காக்க வேண்டும், சமூக மாற்றத்திற்காக உழைக்க வேண்டும் என்றிருக்கின்ற தற்காலத்தேவையில் முஸ்லிம் பெண்களுடைய ஆடை விடையத்தில் கடும்போக்கை கையாள்வது நம்முடைய பிரச்சாரத்திற்குத் தடையாகும் மாறும்.

# 9

## தலாக் என்பது பெண்களை அடிமைப்படுத்தும் இஸ்லாமியச் சட்டம் என்று கூறப்படுவது குறித்தும், இதை அமுல் படுத்தும் காழி நீதிமன்றங்கள் குறித்து நீங்கள் என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?

தலாக் என்பதை இஸ்லாமிய வரலாற்றுத் தேக்கநிலை, இஸ்லாமிய சாம்ராஜ்ஜிய வீழ்ச்சிக்காரணங்களின் ஒரு தொடர்ச்சியாக பார்க்க வேண்டியிருக்கிறது. முத்தலாக் என்பது இஸ்லாத்தின் மூலாதாரச் சட்டம் அல்ல. உண்மையில் மூன்று சபைகளில் அந்த தலாக் இடம்பெற வேண்டும். முதல் தலாக்கை ஒரு சபையில் அவர் சொல்லவேண்டும். பின்னர் மூன்றரை மாதங்கள் இருவரும் அந்தவீட்டிலேயே சேர்ந்து வாழவேண்டும். அந்த மூன்றுமாதங்கள் தவணைக் காலங்கள். அது மரணித்த வீட்டில் சோகமாக இருக்கின்ற இத்தா காலமல்ல. எவ்வளவுக்கு தன்னை அலங்கரித்து மணம் பூசி தன் கணவனைக் கவரமுடியுமோ அப்படியாக, சேர்ந்து வாழ்வதற்குரிய சந்தர்ப்பமாகத்தான் அந்த காலத்தை இஸ்லாம் வைத்திருக்கிறது. அப்படியாயின் தலாக் சொன்ன பிறகு ஒன்பது மாதங்கள் தம்பதியினர் இருவரும் ஒரேவீட்டில் சமைத்து சாப்பிட்டு உறங்கக்கூடிய சூழல் இருந்து அதற்குப் பின்னரும் இருவரும் சேர்ந்து வாழ முடியாத நிலை தோன்றினால்தான் இஸ்லாம் தலாக்கை அனுமதிக்கின்றது. இந்த சட்டமுறையை பிரான்ஸிய சட்டம் மிக அன்மையில்தான் ஏற்றுக் கொண்டது. 1990 களுக்குப் பிறகு கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இந்த சட்டத்தை ஜீ. எல். பீரிஸ் உட்பட சிலாகித்துப் பேசியிருக்கிறார். அதேபோல இலங்கையின் சட்டத் தந்தை வீரமந்திரி என்பவர் லன்டனிலே ஆற்றிய சொற்பொழிவொன்றின் தொகுப்பு நூலில் ஐரோப்பிய மாணவர்களை விழித்துப் பேசும் போது இஸ்லாமிய விவாகரத்து என்பது பிழையாக விளங்கிக் கொள்ளப்பட்டிருக்கிறது. செழுமையான இச்சட்டத்தை அடிப்படைவாதம் என்ற ஒற்றைச் சொல்லால் நீங்கள் தூக்கிவீசிவிடாதீர்கள். உடைந்து ஒழுகிக்கொண்டிருக்கும் செத்து நாறிக்கொண்டிருக்கும் உங்களுடைய மேற்குலகின் கண்டுபிடிப்புகளையும் தொழில் நுட்ப வளர்ச்சியையும் நாகரிகத்தையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமாக இருந்தால் பதினாலு நூற்றாண்டுகள் தாண்டியும் இன்றுவரை இளமை குன்றாத சட்டவியலை படித்துப் பார்க்க வேண்டும். படித்துவிட்டுத்தான் மறுக்க வேண்டும்‘ எனக்குறிப்பிடுகின்றார்.

எனவே இந்தத் தலாக் என்ற இந்தப் பகுதி இலங்கையில் காழி நீதிமன்றத்தை அலங்கரிக்கின்ற காழிமார்களுக்குக்கூட தெளிவில்லாத நிலையில் தேன்போத்தலை, நெய்போத்தலை வாங்கிக் கொண்டு உடனடியாக தலாக் சிட்டை எழுதிக் கொடுக்கின்ற நிலையில், தகுதியான ஆலிம்களோ இஸ்லாமிய சட்டவியல் பற்றிய குறைந்தபட்டி டிக்ரியோ அல்லது பட்டப்பின்படிப்புக்களை படித்தவர்கள் அந்தப் பொறுப்புக்களை சுமக்காத நிலையில், வீழ்ச்சியடைந்த காலப்பிரிவில் எழுதப்பட்ட அல்லது முத்தலாக்கைப் பற்றிப் பேசப்பட்ட இப்னுத்தைமியாவின் கால இஸ்லாமிய சட்ட ஆய்வுகள் குறித்த நூல்கள் இல்லாத அல்லது அத்தகைய இமாமிய சிந்தனையாளர்களை ஏற்றுக்கொள்ளாத அறபுக் கலாநிலையங்களில் உருவாகின்ற சில ஹஸரத் மார்களாளும் காழி நீதிமன்றங்கள் நடாத்தப்படுவதால் இந்த சட்டத்தை அமுலாக்க முடியாத நிலை இன்றுவரை தொடர்கின்றது. இதுவும் ஹனபி மத்ஹப்பை பின்பற்றுகின்ற இந்தியச் சூழலில் அந்த மத்ஹபின் சில சிந்தனைத் தவறுகள் இன்றுவரை இழையோடியிருப்பதால், அறபு ஷேய்க் மார்கள் அந்த நாடுகளுக்கு வந்து செல்வதால் இத்தகைய நிலை தோன்றியிருக்கிறது என்று நினைக்கிறேன்.

# 10

## இன்றைய முஸ்லிம் அரசியல் நிலை பற்றி உங்களின் பார்வை என்ன?

இலங்கை முஸ்லிம் அரசியல் அண்மைக்காலத்தில் நலிவடைந்தநிலையில் இருப்பதால்தான் பலரும் சொல்கிறார்கள். அதில் உண்மை இருக்கிறது. தென்கிழக்குப் பல்கலைக்கழக எழுச்சிக்குப் பின்னரும் சுனாமிக்குப் பின்னரும் இலங்கை முஸ்லிம் அரசியல் சூழலை நாம் பார்க்கின்ற போது அதன் செல்நெறி மிகவும் நலிவடைந்ததாக, திட்டமிட்டு சூறையாடப்படுவதாகத்தான் நான் உணர்கிறேன். மற்றொரு வகையில் நோக்குகின்ற போது முஸ்லிம் அரசியல் தலைமைகள் சுனாமிக்குப் பின்னரும், மூதூர் பலவந்த ஆக்கிரமிப்பு வெளியேற்றத்திற்குப் பின்னரம் சமூகத்தொண்டு நிறுவனங்களை அல்லது சீர்திருத்த நிறுவனங்களை நோக்கி இறங்கிவந்ததாகத்தான் நான் பார்க்கிறேன். இதை முஸ்லிம் அரசியலை அல்லது கட்சி அரசியலின் பின்னடைவாகக் கொள்கின்ற அதே நேரம் முஸ்லிம் சிவில் சமூக அமைப்புக்களின் எழுச்சியாகக் கொள்ள முடியுமா? என்பது கேள்விக் குரிய விடயம்.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் மக்களின் கைகளுக்குச் சென்றிருக்கிறது என்று சிலர் அவதானிக்கிறார்கள். அதாவது முன்பு ஒற்றைத் தலைமையாக நீக்கமற நிறைந்திருந்த நிலைமாறி அத்தலைமை நிறைவேற்றத் தவறிய, நிரப்பாமல் விட்ட வெற்றிடங்களையும் பணிகளையும் மக்கள் தமது உள்ளூர்தலைமைகள், ஏஜென்டுகளைக் கொண்டு நிறைவேற்ற ஆரம்பத்திருக்கிறார்கள்.

எனினும் முஸ்லிம் கொள்கைவாத அரசியல் இன்னும் சரியாகக் கட்டப்படாத பலவீனமான சூழலில்தான் நாம் இருக்கிறோம். கட்சி அரசியலைத்தான் உண்மையான அரசியல் என்றும் நம்பிக் கொண்டிருக்கிறோம். கொள்கைவாத அரசியல் உருவானால்தான் பௌத்த பெருந்தேசியவாத பன்சலையை அடிப்படையாகக் கொண்டு எழுகின்ற இலங்கையின்

மூன்றாவது அரசியல் சக்தியோடு நாம் பேரம்பேசவோ அல்லது சமமாக உட்கார்ந்து எமது விடயங்களை கதைக்கவும் முடியும். அதற்கான அடிக்கட்டுமான வேலைகளை பிற்படுத்தாமல் தொடங்கவேண்டி இருப்பதாக நான் கருதுகிறேன்.

இங்கு முஸ்லிம் கட்சிவாத அரசியல் என்னவென்றால் எங்கள் ராத்தாவின் வீட்டுக்கு முன்னால் ரோட்டுப் போட்டுத்தரனும். அப்படி என்றால் நாங்கள் உங்களுக்கு வோட்டுப்போடுவோம் என்பது. கொள்கைவாத அரசியல் என்பது யாருக்கிட்ட கேட்டு நீங்க பிரிச்சிங்க? பிரிக்கிறதுக்கான அதிகாரத்தைத் தந்தது யார்? இது எங்கள் பாரம்பரிய தாயகம். இதில் இரண்டுபேரும் சேர்ந்துதான் பிரிக்கிறதா? சேர்ந்து வாழ்றதா? என்பதைத் தீர்மானிக்க வேண்டும். இந்த இறைமையைப் பேசுவதற்கான இட்டுமையைத் தருவது. இந்தக் கொள்கைவாத அரசியலை காங்கிரஸ் இதுவரைக்கும் செய்யவில்லை. குறிப்பாக காங்கிரஸுக்கென்று தொடர்ச்சியான ஒரு கொள்கை விளக்கப் பத்திரிகையோ, துண்டுப்பிரசுரமோ அல்லது ஒலிநாடாவோ பள்ளிவாசலில் ஒரு குத்பா பிரசங்கமோ கூட இல்லை.

மறைந்த தலைவர் அவர்களும் வெகுஜனப் போராட்டங்களாக சிவில் சமூகத்தை உசார்படுத்தக்கூடிய இஸ்லாமிய பண்பாட்டு அம்சங்களைக்கூட அகவயப்பட்ட ஒன்றாகத்தான் மாற்றியமைத்தார். உதாரணமாக நோன்புபிடிக்கச் சொன்னார். இதை வீட்டுக்குள் நோம்பு பிடித்துக் கொண்டிருக்கின்ற உன்னாவிரதத்திற்கு சமமான அம்சமாகத்தான் குறுக்கிப் பார்த்தார். இவற்றை வெகுஜனப் போராட்டமாக கொண்டு செல்வதற்கான வழிமுறைகளை எங்களுடைய பண்பாட்டிலிருந்தே நாங்கள் உருவாக்கிக் கொள்ளலாம். சிவில் சமூகத்தை உசார் படுத்தலாம். நாடலாவிய ரீதியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஒரு கட்டளை போட்டால் குத்பாவுக்குப் பிறகு ஒரு ஊர்வலத்தை ஒழுங்குபடுத்திச் செய்யலாம். ஆனால் ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை ஓட்டுக்காக எங்கள் பிராந்தியங்களுக்கு வந்துபோகின்ற நிலை இருக்கிறதே தவிர ஒரு கொள்கைவாத அரசியலுக்கான உழைப்பு எந்த மட்டத்திலும் இல்லாத நிலைதான் இருக்கிறது.

இதனால்தான் சுனாமிக்குப்பிறகும் தென்கிழக்கு பல்கலைக்கழக எழுச்சிக்குப் பிறகும் முஸ்லிம் அரசியல் வாதிகள் புஸ்வானமாகப் போய்விட்டதாகத்தான் நான் கருதுகிறேன். முந்தி கருணாவுக்கு கப்பம் வாங்கிக் கொடுத்த இடையீட்டாளர்கள் மாதிரி அவர்கள் இப்போது ஏஜென்டு வேலை செய்கிறார்கள். இதற்காக அவர்கள் முஸ்லிம் அரசியல்வாதிகள் என்ற சொல்லை ஏன் பயன்படுத்துகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

# 11

## இலங்கையில் இன்னொரு பயங்கரவாதமாக உருவாகிகொண்டுவரும் ஊடகக் கலாசாரம்பற்றி என்ன சொல்ல வருகிறீர்கள்?

ஊடக சுதந்திரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதிலே எனக்குக்கிடைத்த ஒரு தகவலின்படி லேக்கவுஸ் நிறுவனத்தில் எந்தவொரு முஸ்லிமையும் இதற்குப்பிறகு

நியமிக்கக்கூடாது என்று மிக உயர்மட்டங்களில் இருந்து அறிவித்தல்கள் வந்ததாக அறிகிறோம். இதேபோன்று இக்பால் அத்தாஸ் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்ற விடயமும் பலதடவை அவரது வீடு தாக்கப்பட்டிருக்கின்றது. தொடர்ச்சியான அச்சுறுத்தல் தொலைபேசிகள் அவரை பயமுறுத்தியபடியே உள்ளன. முஸ்லிம் வியாபாரிகள் கடத்தப்பட்ட சூழலில், வெளியேறிய சூழலில் எங்களுடைய ஊடகவியலாளர்கள் ஏன் அமைச்சர்கள் கூட அதுபற்றி எழுதவுமில்லை, வாய்திறக்கவுமில்லை. அது விடயத்தில் சிங்கள அரசுக்கு சார்பாகத்தான் அவர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு நாட்டில் சிவில் சமூகம் தங்களுடைய வாக்குகளால் நியமிக்கப்பட்ட ஆட்சியாளர்களின் நிலவரங்களை சுதந்திரமாகப் பேசுவதற்கு ஊடக சுதந்திரம் இல்லாமல் இருப்பது மிகப்பெரும் துரதிஷ்டமாகும். இன்றைய அரசியலைவிட ஊடகம் ஒரு சாக்கடைச் சேறு என்று ஒரு மாணவர் என்னிடம் கூறினார். இவ்வூடகக்கலாசாரம் இன்று வியாபிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் இதற்குள் இருக்கின்ற பட்டதாரிகள், புத்திஜீவிகள், இதழியல் அனுபவம் பெற்றோர் என பலர்கடமையாற்றியும் கூட உண்மையை மக்கள் முன் உரைக்கத் தயங்கி நிற்கின்றபோது மாற்று ஊடகங்களை நோக்கி அல்லது நமது கையில் இருக்கின்ற டிஜிட்டல் தொழில்நுட்பத்தையோ எஸ்எம்எஸ் வசதியையோ பயன்படுத்திப் பாடுபடவேண்டிய சூழலுக்குள் நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

இதற்கு சமீபத்திய உதாரணம் சீஎன்என் செய்தி நிறுவனம் பக்தாதிலே ஒரு இடத்திலே நின்று அமெரிக்கத் துருப்புகள் ஈராக்கிய சிறுவர் சிறுமியோடு எவ்வளவு இரக்கத்தோடு நடந்துகொள்கிறார்கள் என்பதை காட்டிக் கொண்டிருந்த நேரத்தில் அவர்கள் எடுக்கத்தவறிய அல்லது கவனமாக – வசதியாக இருட்டடிப்புச் செய்த பகுதிகளை அங்கு நடக்கின்ற கொடுமைகளை தங்களுடைய சட்டைப் பைகளுக்குள் ஒழித்துவைத்திருந்து டிஜிடல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இடதுசாரிகள், அல்ஜெஸீரா செய்தியாளர்கள் உலக அரங்கிற்குக் கொண்டுவந்த போது சீஎன்என் உடைய செய்தி ரூபம் அந்த இடத்திலேயே தகர்க்கப்பட்டது. இதற்குப் பின்னர் பெரும் செய்தி ஸ்தாபனங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற இடத்தில் மாற்று அல்லது எதிர்ச்செய்திகளை சிறுபான்மைக் குழுக்கள், பாதிக்கப்பட்டோர் தங்களது உயிரைப் பனயம் வைத்து சேகரிக்கின்ற நிலையையும் நாம் அவதானிக்கலாம்.

# 12

### கிழக்கில் பௌத்த தேசியவாதம் தனது அகளக்கால்களை பதித்துக்கொண்டும், கிழக்கின் உதயம் பெருவாரியான பணச்செலவில் கொண்டாடப்பட்டுக் கொண்டிருப்பதைப் பற்றியும் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்ற சூழலில் இதை ஒரு கிழக்குவாழ் குடிமகன் என்ற அடிப்படையில் எப்படிப் பார்க்கிறீர்கள்?

உண்மையில் அவர்கள் கொழும்பிலும் நாட்டின் பல்வேறு இடங்களிலும் நடத்திக் கொண்டிருக்கும் கிழக்கின் உதயம் என்ற களியாட்ட நிகழ்வு எம்மைப் பொறுத்தவரை மீள்வாசிப்புச்செய்யப்பட வேண்டிய ஒன்று. அவர்கள் காட்டைத்தான் பிடித்திருக்கிறார்கள்.

அவர்கள் கைப்பற்றியது என்று சொல்வதைவிட சிங்கள பௌத்த தேசத்திற்கான ஒரு வரலாற்றை கட்டமைப்பதற்கான இந்த வெற்றிகளை அள்ளிக்குவிக்கிறார்கள். இது அவர்களுடைய பூமி என்றவாறாக சர்வதேசத்திற்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக இங்கே ஒரு ஊடக யுத்தம் நடந்துகொண்டிருப்பதை நீங்களும் பார்த்துக் கொண்டிருப்பீர்கள்.

முழுநாடும் அவர்களுக்குறியது என்ற ஒற்றைத் தேசத்திற்கான சுவடுகளை நிறுவுதற்கு அவர்கள் பார்க்கிறார்கள். அது அந்தவகையில் இது ஒரு ஆக்கிரமிப்பு விடயம். எங்களுடைய பகுதிகளில் மேலும் சிங்களக்குடியேற்றங்களை அமைக்கவும் கிழக்குமாகாணத்தின் செறிவை உடைப்பதற்கும் முயன்றுகொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே மணலாற்றுப் பகுதியில் வெயிறேற்றப்பட்ட தமிழ் சகோதரர்கள் பெருநிலப்பகுதியில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்த மணலாறை வெளிஓயாவாக மாற்றி இல்மனைட் என்கின்ற மாதாந்தம் நான்கரைக்கோடி ரூபா ஈட்டித்தருகின்ற சொத்தான, முஸ்லிம்கள் சூழவாழ்கின்ற பூர்வீகப் பூமியை சுவீகரித்து ஒரு புதிய மாவட்டத்தை 3-4 மாதங்களுக்குள் அமைக்கவேண்டும் என்று பாதுகாப்புப் பிரிவில் உள்ள பலர் போய் அங்கிருக்கின்ற பிரதேச உறுப்பினர்களைச் சந்தித்து வரைபடம் தயாரித்துக் கொண்டிருக்கின்ற சூழலில் இதனை ஒரு சாதாரண விடயமாக கிடப்பில் போடமுடியாது.

# 13

## எழுத்தியக்கத்தோடு மட்டுமன்றி குறுந்திரைப்படம் சார்ந்த பிறதுறைகளிலும் நீங்கள் இயங்கிக் கொண்டிருப்பதாக அறிகிறோம். அம்முயற்சிகள் பற்றிச் சொல்லுங்கள்?

முஸ்லிம்களை மீடியாவை நோக்கி நகர்த்துவதற்கு பயானும் கிராஅத்தும் போதாது என்று கண்ட நாங்கள் முஸ்லிம் மீடியா ஸ்டூடியோ ராக்கைகளில் பல நூற்றாண்டுக்கணக்கான எங்களுடைய சமயம் பற்றிய பல்வேறு நூற்கள் இருப்பதன் காரணமாக இந்த மீடியாவை உயர்த்தமுடியும் என்ற நம்பிக்கையோடு எங்களுடைய வேலைத்திட்டங்களைத் தொடங்கினோம். முதலில் அப்ரஹாவின் அழிவு என்ற சிறுவர் கார்ட்டூனை அஞ்சல் செய்தோம். சுனாமிக்கு ஒரு மாதத்திற்கு முன்பு புகலிடம் என்ற குறுந்திரைப்படம் ஒன்றையும் இயங்கினோம். இது வெளிநாட்டு வேலைவாய்ப்பினால் ஏற்படும் தாக்கங்கள் பற்றிப் பேசுகிறது. இப்படியாக நண்பர்களை இணைத்து ஆறு குறும்பட முயற்சிகளைச் செய்திருக்கிறோம். இவை சீடி வடிவிலும் வெளிவந்திருக்கின்றன.

சினிமா ஒரு குழுவேலை. அது ஏற்கனவே உதிரியாகவும் கள ஆய்வுகளாவும் நம்மத்தியில் நிகழ்ந்துவந்திருக்கிறது. இப்பேது அதற்குள் நுழைந்து பணியாற்றவேண்டிய தேவை இருக்கிறது. இன்றைய நிலையில் சினிமாத்துறைக்குள் நாங்கள் உற்செல்வதாக இருந்தால் சிங்களவர்களிடம் இருந்தும் தமிழர்களிடமிருந்தும்தான் அதனைக் கற்றுக் கொள்ள வேண்டி இருக்கிறது. இப்படிக் கற்றுக்கொண்டால் எங்களுக்கென்று ஒரு கூரையை உருவாக்கிக் கொள்ளலாம். அதன் கீழ் உருவாகின்றவர்களை வைத்து எங்களுடைய தேசத்தின் பிரச்சினைகளைப் பேசுகின்ற திரைப்படங்களை ஆக்கிக் கொள்ளலாம். கடந்த காலங்களில்

எங்களது மிகப்பெரும் திறமைசாலிகள் சிங்கள, தமிழ் சினிமாக்களை வளர்ப்பதற்கு அந்தந்த கூரைகளுக்குக் கீழ் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இதுதான் வரலாற்று உண்மை. இலங்கையின் தேசிய சினிமாவை முதலாவது நிர்மானித்தவர்கள் இந்த நாட்டின் சிறுபான்மை இனத்தினர்தான் என்பதை நான் சொல்லிக் கொள்ள வேண்டும். இங்கு முதலாவது சினிமாவை எடுத்தவர் நூர்பாய் என்ற முஸ்லிம்தான். 1925 இல் இத்தகைய சினிமா முயற்சிகள் நடைபெற்று வந்தாலும் அதற்குரிய பதிவுகள் அழிக்கப்பட்டிருப்பது துரதிஷ்டமானது. இந்நிலையில் அவை இன்று இந்தோனேஷிய நூலகங்களில் பாதுகாக்கப்படுவதாக அறிகிறேன்.

குறிப்பாக 19 ஆம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியில் பாரசீக முஸ்லிம் வழிவந்த பக்தாத் முஸ்லிம்ளின் பார்ஸீ என்ற நாடக மரபுதான் இலங்கையில் கோலோச்சி இருந்தது. எல்பின்ஸ்டன் என்பது கூட முஸ்லிம்களின் நாடக அரங்குதான். இவர்களுடைய தியட்டர் என்ற சொல் நாடகத்திற்குத்தான் முதலில் பயன்படுத்தப்பட்டது. பின்பு அதனை சினிமா சுவீகரித்துக் கொண்டது. இன்றிருக்கின்ற ஒலும்பியா, டவர்ஹோல், மட்டக்களப்பிலே இருக்கின்ற தியேட்டர் இவை எல்லாம் முஸ்லிம்களால் நிறுவப்பட்ட நாடக அரங்குகள். நாடகத்திற்காக கட்டப்பட்டு பின்னர் திரையரங்குகளுக்காக ஒதுக்கப்பட்டவை. இன்றிருக்கின்ற எல்பின்ஸ்டன் தியேட்டரை புஹாரிதீன் ஹாஜியார் கட்டி அதில் ஒரு முஸ்லிம் தேச சினிமாவுக்கு எல்லாவகையான பங்களிப்பும் செய்தார். இந்த நாட்டின் சிங்கள சினிமாவின் வயது ஐம்பது ஆக இருக்கிறது என்றால் முஸ்லிம் சினிமாவின் வயது அதைவிடக்கூடியது.

முஸ்லிம் தியேட்டர் சம்மந்தமாக ஆராய்கையில் இங்குள்ள அரங்குளை ஆவணப்படுத்தத் தவறிவிட்டோம். முஸ்லிம் சமூகத்திற்கான பாடல்கள், கலைகள் என்பன அமைப்பாக்கம் என்பதினூடாகக் கூட கட்டியெழுப்பப்படவில்லை. மார்க்கவாதிகள் இதனை எதிர்த்ததே பிரதான காரணம்.

பொதுவாக கூத்து வடிவம் சார்ந்த பொல்லடி என்பது எங்கள் கலாச்சார தனித்துவத்தைக் காட்டக் கூடியது. அதற்கான ஒரு வரலாறும் இருக்கிறது. இப்போது இருக்கின்ற குளோபல் கல்ச்சரில் நாங்கள் எதிர் நோக்கின்ற பிரச்சனை எங்களுடைய கலாச்சார அடையாளத்தை பேணிக் கொள்வது பற்றியது தான். இதில் நாங்கள் திரட்டி எடுத்துக் கொள்ள முடியுமாக இருந்தால் முஸ்லிம் மரபு தனிக்கலையாக உருவாக்கம் பெற முடியும்.

அந்தக் காலத்தில் அண்ணாவியார் ஒரு நெறியாள்கை செய்திருக்கிறார். அவர் வைத்தியம் உற்பட பல துறை சார்ந்தவராக இருந்திருக்கிறார். குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தங்களது தனித்துவத்தைப் பேணிய அண்ணாவிமார்கள் இன்னமும் இருக்கிறார்கள்.

நான் நினைக்கிறேன் பெண்ணியம் அனைத்தையும் களைந்து எறிந்து விட்டு ஓடுகின்ற இவ்வுலகத்திலே போரில் வெற்றியில் நான் றபான் அடித்து, தகரா அடித்துப் பாட்டுப் பாடுவேன் என்று நேர்ச்சை வைத்து நாயகமவர்களிடம் ஒரு பெண்மணி சொன்ன போது நபி அதை அங்கீகரித்திருக்கிறார்கள். திருமண வீடுகளில் பாடல்கள், முக்கிய தினங்களில் பாடல்கள், பொருநாள் தினங்களில் பாடல்கள் என்று இது விரிவு பெற்றிருப்பதைக்

காணலாம். யுத்தத்திற்காக அகழி தோன்றுகின்ற போது நான்கு அடி பைத்தில் (பாடலில்) நபி அவர்கள் இரண்டு அடிகளைப் பாட மற்றைய நபித்தேழர்கள் மண்ணைத் தூக்கி எடுக்கும் போது மிகுதி இரண்டு அடிகளையும் பாடி இருக்கிறார்கள். இந்த உண்மைகள், சான்றுகள் எங்கள் பாடத்திட்டங்களில் ஆரம்ப காலத்திலிருந்து உள்வாங்கப்பட்டிருந்தால் நாம் இன்று வெகுவாக வளர்ச்சி கண்டிருப்போம்.

இன்னொன்று இங்கு பெரும்பான்மையோரின் ரசனைமட்டம் தென்னிந்திய சினிமாவை ஆதரிக்கிறது. இதனை கேள்விக்குறப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. இங்கு ஈரான் சினிமா பற்றியும் பேசலாம். அச்சினிமாக்களைப் பொருத்தவரை இஸ்லாமிய பண்பாட்டோடு இனங்கிவரக்கூடியதாகவும் இஸ்லாமிய அடையாளத்தோடு வெளிவரக்கூடியவைகளுக்கு ஆதர்ஷனமாகவும் இருக்கிறது. இதேபோன்று ஜப்பானிய சினிமாவும் எங்களுடைய கலாசார பண்பாட்டு விழுமியங்களுக்கு இயைபானது. உலகத்தரத்திலிருக்கும் சில சினிமாக்களையும் 2000 இக்கும் மேற்பட்ட தமிழ் சினிமாக்களில் 16 படங்களையாவது பார்க்க வேண்டும் என எனது நண்பர் ஒருவர் சொன்னதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

(முற்றும்)

idrees.lk